

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று சென்னை, செனாய் நகர் ‘பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 41.83 கோடி ரூபாய் செலவில் 7 முடிவுற்ற திட்டப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயரதிகாரிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளனர்.



சென்னை, செனாய் நகர் ‘பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கோயம்பேடு பசுமை பூங்காவினை திறந்து வைத்ததற்காகவும், ராமாபுரம் திறந்தவெளி பூங்காவினை திறந்து வைத்ததற்காகவும், பம்மல் – ஈஸ்வரி நகர் விளையாட்டுத் திடலினை திறந்து வைத்ததற்காகவும், முடிச்சூர் – இரங்கா நகர் குளக்கரையினை மேம்படுத்தி திறந்து வைத்ததற்காகவும், அப்பகுதிகளை சேர்ந்த மக்கள் காணொலிக் காட்சி வாயிலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயரதிகாரிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) சென்னை, செனாய் நகர் ”பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 10.56 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடலை திறந்து வைத்தார். இதில் இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயரதிகாரிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளனர்.



சென்னை, நகராட்சி நிருவாக இயக்குநரகத்தில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (26.09.2025) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நகராட்சி ஆணையர் நிலை – 2 மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் நிலை –2 ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 11 பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். இதில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கும்மிடிப்பூண்டி - எல்லாபுரம் ஒன்றியத்தில்

## உங்களுடன் ஸ்டாலின் முகாம்

### டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கும்மிடிப்பூண்டி, செப். 27-

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் சாணாப்புத்தூர் ஊராட்சி உயர்நிலைப்பள்ளியில் சாணாபுத்தூர் சூரப்பூண்டி, ஏடூர் மற்றும் எல்லாபுரம் ஒன்றியம் தொம்பரம்பேடு பைரவர் கோயில் அருகில் தாராட்சி செஞ்சியகரம் பேரண்டூர் மேற்கண்ட இரு ஒன்றியத்தில் ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.

உடனடியாக பொதுமக்கள் கோரிக்கைளை 45 நாட்களுக்குள் நிறைவேற்றிட வேண்டி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினரும் கும்மிப்பூண்டி மன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் கேட்டுகொண்டார்.

நிகழ்ச்சியில் ஜெ மூர்த்தி மு.மணிபாலன், ஏ.வி ராமமூர்த்தி, மு.பாஸ்கர் வி.பி.ரவிகுமார் க.சம்பத் பா முத்துசாமி அப்துல்ரஷீத் டிசங்கர், சீனு கோல்டுமணி, பாபரத்குமார் ஜி. சுமன். ஏசுரத்தினம். சந்திரமோகன். ஜெயா சந்திரன். கதிர். வேணுகோபால் பழனி நாகராஜ் பாலசந்தர் லாரன்ஸ். அமுல்ராஜ், ரவி. வீரா. அன்பு பார்த்தசாரதி. கணபதி சீனிவாசன் விக்டர் சிவகாமி. சத்யா குயில்அமுதன் முனுசாமி பாபு யசோதா. கார்த்திக் சிவா கோகுல் ஜீவா, சம்சுதின். அப்புன். வெங்க டேசன் திருநாவுக்கரசு. கார்த்திக் சிவாஜி ஆஞ்ஜிநேயலு, சிவசங்கர், சந்திரசேகர், இராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99–இல்

## “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்

### இ.பரந்தாமன், எம்,எல்,ஏ., பார்வையிட்டு ஆய்வு!

சென்னை,செப்.27-

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, புரசைவாக்கம், ராஜா அண்ணாமலை சாலையில் உள்ள தர்மபிரகாஷ் திருமண மண்டபத்தில் 23.09.2025 அன்று நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” முகாமைப் பார்வையிட்டு, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களிடம் அவர்களின் கோரிக்கைகள் குறித்துக் கலந்துரையாடினார்.

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற பகுதிகளில் நடத்தப்படும் முகாம்களில் 13 அரசுத் துறைகளைச் சேர்ந்த 43 சேவைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் மருத்துவ சேவைகளை வழங்கிட மருத்துவ முகாமும் நடத்தப்படுகிறது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று விண்ணப்பத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்து அளித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண்.99க்குட்பட்ட பொதுமக்களுக்கான “உங்களுடன் ஸ்டாலின்” இரண்டாம் கட்ட முகாம், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஏற்பாட்டில், 23.09.2025 அன்று புரசைவாக்கம், ராஜா அண்ணாமலை சாலையில் உள்ள தர்மபிரகாஷ் திருமண மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடைபெற்றது.

இம்முகாமில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தித் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, காவல் துறை உள்ளிட்ட 13 அரசுத்துறைகள் மூலம் பொதுமக்களிடமிருந்து 888 விண்ணப்ப மனுக்கள் பெறப்பட்டு, உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றுக்கான ஒப்பமும் வழங்கப்பட்டது.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் இம்முகாமில் இடம் பெற்ற ஒவ்வொரு அரசுத் துறை பகுதியையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களிடம் கலந்துரையாடி, அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் தெரிவித்தார். இம்முகாமையொட்டி நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டு, மருந்துகள் வழங்கப்படுவதையும் பார்வையிட்டார்.

இம்முகாமில் மத்திய சென்னை வருவாய்க் கோட்டாட்சியர் சதீஷ், 99வது வார்டு மாநகராட்சி உதவிப் பொறியாளர் சிவக்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

மற்றும் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருசோத்தமன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், மா.காந்தி; 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 108 ‘அ’ வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 99வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் திவாகரன், 99 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கப்பில்குமார், குணா; 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், 108 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சூர்யா, ஜெயகுமார்; 58 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜ்குமார், 77வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் மகாதேவன், 78 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மகேஷ்குமார், எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி, பாக முகவர் கவிதா, ஆர்.கே.புரம் சிவக்குமார், தனுஷ், விஷால் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் இவ்வாய்வின்போது உடனிருந்தனர்.


